**குற்றவியல் நடபடிமுறைக் கோவைக்கான திருத்தச் செயற்பாடுகளை தவிர்க்குமாறு அரசாங்கத்திடம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) வலியுறுத்துகிறது**

2016 ஐப்பசி மாதம் 2 ஆம் திகதி அச்சு ஊடகத்தில் வெளியாகிய நடபடிமுறைக் கோவைக்கான திருத்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பிலான அரசாங்கத்தின் எண்ணம் தொடர்பாக நீதி அமைச்சரால் கூறப்பட்ட கூற்று தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் **(CPA)** தனது ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தி வருகின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது கடந்த காலத்திலே இடம் பெற்ற அடைத்து வைப்புக்கள் தொடர்பான எதேச்சாதிகார நடபடிமுறைகளையும், நிர்வாக வழிகாட்டிக் கோட்பாடுகளையும் குறிப்பாக சட்டத்தின் படியான நடைமுறை என்றதனடிப்படையில் சவாலுக்குட்படுத்தியிருந்தது. தற்போதைய இந்த திருத்தமானது ஏலவேயுள்ள அரசியலமைப்பு, சட்ட மற்றும் நிர்வாக பாதுகாப்புக்களிலிருந்தும் மற்றும் இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகளிலிருந்தும் பிறழ்வடைவதனால் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது இத் திருத்தச்சட்டமூலத்தினை இவ்வடிவத்திலேயே முன்னெடுத்தலை கைவிடுமாறு அரசாங்கத்திடம் கோருகின்றது.

குறிப்பிட்ட இத்திருத்தத்திற்கான சட்டமூலமானது 15 ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 2016 அன்று வர்த்தமானியிலே வெளியிடப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு(HRCSL), இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) மற்றும் பல சிவில் சமூக நிறுவனங்களினால் விமர்சனத்திற்குட்படுத்தப்பட்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினதும் சரியான நேரத்திலான தலையீட்டை வரவேற்கின்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடிதத்திலே, முன்மொழியப்பட்டுள்ள இச்சட்டமூலம் இயற்றப்படின் சந்தேகநபர்கள் சித்திரவதை, கொடூரமான மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தைக்கு உள்ளாகக்கூடிய அபாயம், சட்டமுரணான கைது மற்றும் அடைத்து வைப்பு என்பன அதிகரிக்கும் என்பன உள்ளடங்கலான, முன்மொழியப்பட்டுள்ள இச்சட்டமூலத்தின் பல பாரதூரமான குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் இதே விடயங்களை உள்ளடக்கி ஜனாதிபதிக்கு எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

அரசாங்கமானது தொடர்ந்தும் இச்சட்டமூலத்தினை நிறைவேற்றுவது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதானது, அரசினால் அடைத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை சித்திரவதையிலிருந்து பாதுகாப்பது தொடர்பாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள கடப்பாடுகளுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கிடைக்கும் GSP (Plus) வரிச்சலுகையை பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு தற்போது செய்து வருகின்ற முயற்சிகளுக்கும் தடையாக அமையும்.

மேலும் இச்சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செயன்முறை மற்றும் நீதி அமைச்சரின் கூற்று என்பன இலங்கையிலே சட்டமாக்கும் செயன்முறையில் உள்ள பாரிய பிரச்சினைகளை சுட்டிக்காட்டுவனவாக அமைகின்றன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது மீண்டுமொருமுறை சட்டவாக்க செயற்பாடுகளிலே வெளிப்படைத்தன்மையையும், பொது மக்களின் பங்கு பற்றுகையையும் உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோருகின்றது. குறைந்த பட்சமாக சட்டவாக்கத்தினை வரையும் முன் அது தொடர்பாக பயன்பெறுனர்களை கலந்தாலோசித்தல் மற்றும் சட்டவாக்க வரைபினை பொதுமக்கள் அணுகும் வாய்ப்புள்ளமையை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றையேனும் மேற்கொள்ள வேண்டும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது சட்டவாக்க செயன்முறையிலே உள்ள இப்பிரச்சினைகளை தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் அரசியலமைப்பு சீர்திருத்த செயன்முறையிலே கவனத்தில் கொள்ளுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது.